முற்பகல் 11–20

2. தகவல் கோரல்

(அ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பட்ட பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்கவுள்ளார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் இல்லை. உட்காருங்கள். நேற்றைய பிரச்சினை நேற்றே முடிந்துவிட்டது. நான் தீர்ப்புக் கொடுத்துவிட்டேன். அதற்கு மேலும் அதிலே வேறு ஒன்றுமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் இல்லை. நான் ஏற்கெனவே அதற்குத் தீர்ப்புக் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் நேற்றே அதற்குத் தீர்ப்புக் கொடுத்துவிட்டேன். அதற்கு மேலே அதிலே ஒன்றும் விவாதம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும், நீங்கள் உட்காருங்கள். இதற்கு மேற்கொண்டு ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேற்றே அதுபற்றிய முழு விவாதமும் முடிந்துவிட்டது. நான் ஒரு* Ruling *கொடுத்துவிட்டேன். மேற்கொண்டு அதைப்பற்றிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் இல்லை. நேற்றே நான் தீர்ப்பு கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நேற்றே நான் அதற்கான முடிவைச் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்ப அதை நீங்கள் வற்புறுத்துவது நியாயமல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.*

பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

2013 ஏப்ரல் 16] [பேரவைத் தலைவர்]

அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். நான் முதலமைச்சர் அவர்களைப் பேச அழைத்துவிட்டேன். அவர்கள் அறிக்கையை அளிக்கவுள்ளார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேற்றே நான் அதற்கு தீர்ப்பு கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை. நேற்றே நான் தீர்ப்பு கொடுத்துவிட்டேன். அதற்குமேல் விவாதம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) அதற்கு மேலே விவாதம் இல்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சில பிரச்சினைகளை இங்கே எழுப்பி, நீங்கள் அதற்குரிய தீர்ப்பையும் வழங்கிய பின்னர், அந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்ப முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நீங்கள் பேசியதும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பேசியதும் இருக்கிறது. நேற்றே நான் தீர்ப்பு கொடுத்துவிட்டேன். மேற்கொண்டு நான் எதையும் மாற்றுவதற்கு இல்லை. (குறுக்கீடுகள்) நான் கொடுத்த தீர்ப்பில் எதுவும் மாற்றுவதற்கு இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, முடியாது. நான் நேற்றே தீர்ப்பு வழங்கிவிட்டேன். நீங்கள் நினைத்து, நினைத்து எல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் நேற்றே தீர்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் நேற்றே வெளிநடப்புச் செய்துவிட்டீர்கள். இன்றைக்கு வந்து கேட்கக்கூடாது. (குறுக்கீடுகள்) இன்றைக்கு வந்து அதைப்பற்றி கேட்கக்கூடாது. இல்லை, இல்லை. நேற்றைக்கே அதற்காக வெளிநடப்புச் செய்துவிட்டீர்கள். இன்றைக்கு திரும்பவும் அதைப்பற்றி நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நேற்றே நீங்கள் அதற்காக வெளிநடப்புச் செய்துவிட்டீர்கள். நேற்றே நான் தீர்ப்பு கொடுத்துவிட்டேன். நீங்கள் மேற்கொண்டு இன்றைக்கு அந்தப் பிரச்சினையைக் கிளப்புவது நியாயமில்லை. உட்காருங்கள். உட்காருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)